ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2186/31 - 2020 ජූලි මස 31 වැනි සිකුරාදා - 2020.07.31
*2186/31 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### தேசிய அரச பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்

*28 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரினால் வகுக்கப்பட்ட கட்டளை.*

**டலஸ் அலஹப்பெரும (பா. உ.),**
கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2020, யூலை 27.*

1A - G 32596 - 22 (2020/07)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறை சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் வகுக்கப்பட்ட 2016 ஒற்றோபர் 27 ஆந் திகதிய 1990/ 23 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் II உப ஆவணத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய விளையாட்டுக்கள்/விளையாட்டு வகுப்பில் சேர்த்துக் கொள்வதன் மூலம் அக்கட்டளை இத்தால் மறுசீரமைக்கப்படுகின்றது.*

*72. யீட் குண்டோ*

*08 - 310*

---

## 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்

*32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

*கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அலஹப்பெரும ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் இலக்கம் 32 (ஆ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சைக்கிள் ஓட்டுவதற்கான தேசிய சம்மேளனமாகிய இலங்கை சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் பதிவினை தற்காலிகமாக இத்தால் இரத்துச் செய்வதுடன் உடன் செயற்படும் விதமாக இலங்கை சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் பதவிதாங்குனர் தேர்தலை நடாத்தும் வரையில் அவற்றின் பணிகளை நடாத்திச் செல்லுவதற்கும் மற்றும் பதவிதாங்குனர் தேர்தலுக்காக அழைப்பு விடுத்தல் மற்றும் நடாத்துவதற்கு உரிய அதிகாரம் கொண்டவராக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இத்தால் அதிகாரத்தை வழங்குகின்றேன்.*

**டலஸ் அலஹப்பெரும,**
*கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.*

கொழும்பு,
*2020, யூலை 27.*

*08 - 311*

---

## 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டலஸ் அலஹப்பெரும,**
*கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.*

கொழும்பு,
*2020, யூலை 28.*

*கட்டளை*

*2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 2006/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள், 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 23 ஆந் திகதிய 2137/85 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதிய 2166/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள் மற்றும் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதிய 2177/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் வாயிலாக திருத்தியமைக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் II ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள 5(1) இன் முதலாம் பந்தியினை கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு புதிய வாசகத்தினைச் சேர்ப்பதன் வாயிலாகத் திருத்தியமைக்கின்றேன்.*

*5(1) ஒவ்வொரு தேசிய விளையாட்டுச் சங்கங்களும் கீழ்க் காட்டப்பட்டுள்ள அலுவலர்களும் உள்ளடங்கலாக தமது அமைப்பு விதியில் காட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர் எண்ணிக்கையினுள் உள்ளடங்கிய குழுவொன்றினைத் தெரிவு செய்து நியமித்துக் கொள்ளுதல் வேண்டும். அந்நிறைவேற்றுக் குழு தொடர்பாக நியமிக்கப்படும் உறுப்பினர்களில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) பெண்களின் பிரதிநிதித்துவமும் 20% இளைஞர்களின் பிரதிநிதித்துவமும் இருத்தல் வேண்டும். (இங்கு இளைஞர் பிரதிநிதித்துவம் எனப்படுவது வயது 18 வயதிற்கு மேற்பட்டவரும் 40 வயதிற்கு குறைந்த நபர்களாவர்).*

*இக்கட்டளையானது 2021.01.01 இலிருந்து செல்லுபடியாகும்.*

*08 - 317*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.